**தஞ்சாவூர், செயற்பொறியாளர் (வே.பொ)(பொ) அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர்: திரு. H.N.கான், எம்.டெக்., எம்.பி.ஏ**

**செ.மு.ஆ.எண்: ஆ/3172/2020** **நாள்: 11.11.2020**

பொருள் : பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி –திரு.க.ஆனந்த், இளநிலை உதவியாளர் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்தது –இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து உத்தரவிடல் - தொடர்பு.

பார்வை :
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.2359/PSD-1/2020, நாள்: 29.05.2020.
2. சென்னை-5 வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.OPS5/22094/2020, நாள்: 05.08.2020
3. சென்னை தலைமைப் பொறியாளர் (வே.பொ), அவர்களின் செயல்முறை ஆணை எண். ME2/19591/2020, நாள்: 13.08.2020.
4. தஞ்சாவூர் செயற்பொறியாளர் (வே.பொ), அவர்களின் செயல்முறை ஆணை எண். ஆ/2152/2020, நாள்: 24.08.2020.

-------

**ஆணை:**

பார்வை (1)-ல் காணும் செயல்முறை ஆணையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 2018-19 மற்றும் 2019-20 ஆண்டு முடிய நேரடித் தேர்வின் மூலம் தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்டு, பார்வை (2)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (3)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, பணி நியமன ஆணை வழங்கி தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.க.ஆனந்த், இளநிலை உதவியாளர் அவர்கள் பார்வை (4)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி தஞ்சாவூர் செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் **27.08.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.**

மேற்படி இளநிலை உதவியாளராக (பி.அ) பணிபுரிந்து வரும் திரு.க.ஆனந்த் அவர்கள் **பணியில் சேர்ந்த நாளான 27.08.2020 முற்பகல் முதல் கீழ்கண்ட விவரப்படி பணிவரன் முறை** செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பணிபுரியும் அலுவலகம் | தேர்வாணைய எண் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | க. ஆனந்த், இளநிலை உதவியாளர் | செயற்பொறியாளர்(வே.பொ), தஞ்சாவூர் | 74 | 27.08.2020 முப | 27.08.2020 முப |

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examinations-IV for the year 2018-2019 and 2019-2020 recruitment"

மேலும் இவர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு தகுதிக்காண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

மேலும் க. ஆனந்த், இளநிலை உதவியாளர் -க்கு பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்த பின்னர் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

11/11/2020

செயற்பொறியாளர் (வே.பொ)(பொ),
தஞ்சாவூர்.

11/11/20

பெறுநர்
திரு.க.ஆனந்த்,
இளநிலை உதவியாளர்
இவ்வலுவலகம்.

படி- சென்னை வேளாண்மை இயக்குநர், அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

படி சென்னை தலைமைப் பொறியாளர் (வே.பொ), அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

படி தஞ்சாவூர் கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ), அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

படி இருப்புக் கோப்பு

படி பணிப்பதிவேடு